# உதயதாரகை—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at two shillings a year, payable in advance.*

அம் புத்தகம். சஞ்சிகை யிஅ.] ௲அ௱சஅ ஹு. புரட்டா. மீ. உஅ தேதி வியாழக்கிழமை Thursday, Sept. 28, 1848. [Vol. VIII. No. 18.

TERMS OF THE PAPER.

For each copy—*two shillings a year*—PAYABLE IN ADVANCE.

To *Subscribers who receive the Paper by mail*, each copy, *inclusive of postage—four shillings a year.*

The difficulty of remitting small sums from distant places may be obviated by *five subscribers' uniting their subscriptions and remitting them together in a single pound note.*

The names of Subscribers will be published; and *all receipts of money* will be regularly acknowledged on the last page of the Paper.

*Subscribers on the Continent* may receive the paper at *four shillings a year*; their papers having to be sent by mail, and a postage of *one penny*, being *prepaid* on each. This is exclusive of Continental postage.

Agents are requested to receive no subscriptions except in conformity with the above terms.

Advertisements will be inserted as heretofore at the rate of *one penny and a half* each line, reckoning the type at Brevier size or seven and a half lines to an inch.

*All Notices of Deaths and Marriages will be chargeable as Advertisements.*

Communications should be *post paid* to receive attention.

POINT PEDRO—Mr. G. H. Hallock.
JAFFNA—The Missionaries.
TRINCOMALIE—Rev. J. Walton.
COLOMBO—Messrs P. B. Fernando and Son.
KANDY—Mr. L. Lawton.
BATTICALOE—Rev. J. Gillings.
MADURA—Rev. C. F. Muzzy.
DINDIGUL—Rev. J. Rendall.
MADRAS—P. R. Hunt, Esq.

On the Hindu doctrine of Maya.

## சகத்துமாயோபாதானமாமா?

[மாயை, உபாதானம் என்னும் பதங்கள் சம்ஸ்கிர்தரூபத்திலே குணசந்தி விதியினல் வியாகரண விகிதமாய் மாயோபாதானமென்றயிற்று.]

உலகமானது மாயையின் நின்று கடவுளாற்சிருட்டிக்கப்பட்டதென்பது சிவஞான சித்தியார் சிவஞானபோதம் முதலாகிய சித்தாந்த நூற்களின் சம்மதம். இது குயவன் மண்ணைக் கொண்டு குடத்தை வணைவதுபோலாம். குடத்திற்குக் குயவன் நிமித்த காரணமும், மண் முதற்காரணமுமானது போலச் சகத்துக்குக் கடவுள் நிமித்தகாரணமும் மாயை முதற்காரணமும் என்றுயிற்று. இம்மாயையானது ஓர் அசித்துப் பொருள். இதற்குத் திட்டாந்தம், சிவ ஞானசித்தியார், "மாயைச்குணர்வொன்றுமில்லை என்றே வைத்தனர்" என்பதினுலும் உணர்வில்லாததோர் பொருள் அசித்து ஆதலாலும், மாயை அசித்தென்றே முடியும். இப்படியாய்ச் சகத்து மாயோபாதானமாய் வந்ததென்று சித்தாந்தங்கள் அறுதியிடலால், இது உறுதியாவென விசாரவணசெய்வோம்.

கவது. சகத்துமாயோபாதானமாய்ச் சிருட்டியாயிற்று என்னும்தாட்டாந்தம் ஒரு காலத்தும் சாட்சிபூர்வமாக ரூபிக்கப்பட்டதில்லை. தாட்டாந்தமாத்திரையாய்த்தாட்டாந்தகமாகாதுநிற்கப்பெரியோர்சொற்ருர்களேன்று அஞ்சி ஆகம அளவை மார்க்கமாய்த் தலைமேற்கொள்வதே அன்றி அனுமான அளவையாற் காட்ட ஆரம்பித்த சித்தாந்திகள் அனுமித்துக் காட்டினுர்களேன்று தலைமேற்கொள்வதற்கு இடமில்லை. நூற்களிலும் தர்க்க வாக்குகளிலும் இத்தாட்டாந்தத்திற்குத்திட்டாந்தங் காட்டுவோமெனப் புகுந்தவர்களுளராயினும் அவர் காட்டியவைகள், விளக்கற்குச் சமைத்த உதாகரணங்களேயன்றி நியாயங்கள் அன்ரும். சோன் மாத்திரத்தே நம்புவீராயின் ஆகாயத்திலுள்ள முயற்கோட்டே, கன்னங்கரிய தாமரையிதழ் முளைத்துக் கிளைத்துக் காய்த்தது என்று நான் சொல்லில் நீங்கள் நம்பவேண்டுமே.

உவது. ஒரு பொருள் மற்றொரு பொருளினின்று தோற்றுவதேயன்றிச் சூனியத்தினின்று தோற்ருது என்னுங் கோட்பாட்டைப்பற்றியேசிருட்டிக்காதாரமாக மாயையை நிறுத்தினதால் அக்கோட்பாடு சரியாவெனப் பார்ப்போம். இதுவும் முந்தினதைப்போலவே மனதிலே எழுந்த ஓர் எண்ணமேயன்றித் திட்டாந்தம் பூர்வமாக அனுமிக்கப்பட்டதல்ல, இது எப்படி அனுமித்தார்கள் என்று விசாரிக்கின், குயவன் சட்டி பானைவனைதற்குக் களிமண்ணில்லதேல் முடியாதென்றும் காருகன் துகில் நெய்தற்கு நூலில்லதேல் முடியாதென்றும் இவைபோன்ற உலக நெறி சிலவற்றைக்கொண்டு துகிலுக்கும் சட்டிபானை முதலிய மிர்த்திகாபாத்திரங்களுக்கும் காருகனும் குயவனும் நிமித்தகாரணங்களே, உலகத்திற்குங் கடவுள் நிமித்தகாரணமே எனக் கண்டு குலாலனுக்கும் கடத்துக்கும் காருகனுக்கும் படத்துக்கும் உளவாய சம்பந்தங்களெவற்றையும் உலகத்தோடுங் கடவுளோடும் ஒட்டிச் சாதித்து சூனியோபாதானமாய் யாதும் தோற்ருதென முடித்ததாகவே விளங்குகின்றது. கடவுளின் சிருட்டிகள் அவர் அமைப்புக்கிசையச் செய்யும் செயல்களையும் அவர்தாமே செய்யும் செயல்களையும் எவ்வாற்ருனேனும் ஒரு தன்மையவாகப் பார்ப்பது புத்திபூர்வமன்று.

௩வது. சூனியோபாதானமாக யாதும் தோற்றுவிக்கக் கடவுள் வல்லவரல்லவெனின் இது அவருடைய தேவலட்சணங்களையும் பங்கப்படுத்துவதாம். கடவுள் சர்வதத்துவமுள்ளவராதலால் அவரால் முடியாதொன்றிராது. முடியாதொன்றுண்டேனில் சர்வதத்துவம் இலராம். ஆனல் மலரகிதரான கடவுள் பாவகன்மம் பயில ஏலாரே, ஆகவே அவருடைய சர்வதத்துவம் அங்கும்பின்னப்பட்டதின்ற என்றல், இது யுத்தியாகிய ஏணியிலே அடிவைத்துச் செல்வேமாகிய நமக்குச் சம்மதமாகாதே. பாபம் செய்தல் கடவுளால் ஏலாதென்றது யுத்தி வழி ஏலாதே. ஏலாதகாலத்தே அவர் பரிசுத்தரல்லவே. மனுஷனைப் பாபம் செய்யக் கூடியவனுகப் படைத்த கடவுள் அது தாம்செய்யச் சத்தியில்லாரென்பது மிகப் புத்தி இல்லார் சொல்லே.

ஆனற் கடவுள் ஒரு காலத்தும் பாபம் செய்யவில்லையே என்றல் இது அவர் பாபம் செய்ய ஏலாரென்பதைக்காட்டமாட்டாதே. ஆழ்ந்த சமுத்திரத்திடத்தே வீழ்ந்துயிர் நீப்பது செய்திலேனுதலால் அது செய்தற்கு ஏலாதேனென்றுதோலாத நியாயம் சொல்லப் பார்ப்பீர்களா? மேலும் சைவாகமங்களே எவற்றிற்கும் காரணனுதல் சவர்வசத்தித்துவம் வரம்பிலாற்றல் என்னும் குணங்கள் ஈச்சுரன் முக்கிய குணங்களென அறுதியிட்டு ஈதோன்றை முடிக்க ஏலாதவரென உறுதியிடுவதேல் அது அவருடைய ஆற்றலுக்கு வரம்பு கூறித் தமக்கே இறுதியிடுவதாக மாறி முடியுமே.

சவது. சக சிருட்டிக்கு உபாதானமாகவிருக்கும் மாயையானது அநாதிநித்திய வஸ்துவாமெனச் சித்தாந்தங்கள் துணிந்து சொல்லினும் விவேகம் பூர்வமாக மனோவிருத்தியைச் சின்மாத்திரமாக்கி யுத்தித்துப் பார்க்கும்போது, மாயையென் ஒன்றுளதென்று தீர்த்திரேல் அது ஆதி அநித்திய வஸ்து என்றே முடியவேண்டும். தூலதேகமாகத் தோற்றும் அசித்துகள் யாவும் இத்தோற்றத்துக்கு முன் மாயையிடத்தே சூக்குமித்துச் சத்திரூபமாக அடங்கியிருந்ததெனவேன்பது சித்தாந்திகளின் கருத்து. இது எப்படி எனின் ஒரு ஆலம்விரையிடத்தே அதிலிருந்து தளிர், தழை, பூ, காய் முதலிய வெளியே தோற்றற்கு முன்னும் சூக்கும அளவாயதனுள்ளே அடங்கியிருந்ததுபோலாம். இவ்வண்ணம் தோற்றுகிற அளவிலே மாயையிற் சத்திரூபங்கள் யாவும் சங்கற்பத்தினல் அமைந்ததாக இருக்கின்றது. சங்கற்பத்தினலமைந்ததேல் அது விவேகத்தின் கிரியையாகவேண்டும். விவேகத்தின் கிரியையாமேல் அநாதியென்றெடுத்துக்கொள்ளப்பட்ட மாயை விவேக வசதுவாகவேண்டும். ஆனல் மாயையை அசித்தென்று வைத்தபடியினலே இச்சங்கற்பிதம் பிறவஸ்துவினல் அமைக்கப்பட்டிருக்கவேண்டும் ஆகவே மாயை, அப்படி ஒன்றுள்ளதேல், ஆதி அநித்தியமென்று முடியும்.

மாயையோ அநாதியாய் உள்ளது. மாயையிடத்துச் சூக்கும சத்திரூபங்களோ கடவுளால் அமைக்கப்பட்டன எனின் இது சூனியோபாதானமாய் யாதும் தோன்ருது என்னும் கோட்பாட்டை நசித்து அதிலே வேர்பற்றி நிமிர்ந்த மாயோபாதானத்தை மறுப்பதாம். நசிப்பதெப்படி எனின் சூக்கும ரூபங்கள் எத்துணைச் சிறியவேனும், சூனியம் அல்ல, உள்ளன சில, ஆதலாலே அவை சூனியோபாதானமாய்த் தோற்றி இருக்கவேண்டும். சொல்லப்பட்ட கருத்துகளுள் எதன்புடைசாரினும் சித்தாந்திகளுக்குப் பஞ்சவர்ணமாய் ரத்னகசிதமாய் அமைந்த பாஷாண போசனமாமே.

இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட சூக்குமசத்தி ரூபங்களை இன்றி மாயை உள்ளது எனினும் கடவுள் சிருட்டிக்குத்தான் இன்றி ஏலாமை பற்றி வந்ததோர் பொருளாதலால் அவ்விடத்தும் சங்கற்பம் தோன்றுமே இப்படிஆதலால்மாயையென்றோர்பொருள்சித்தாந்திகள் கூறிய இலட்சணங்களோடமைந்ததாய் இருக்கயில்லை என்றும் சன்மார்க்கமாய்க்கற்பிதமாய்ச் சிருட்டிசெய்ததாலாட்டப்பட்டு அலங்கார பூஷண வஸ்திராதி அணிகளாற் புனையப்பட்டு விபரீத நெறியைமுதிரக்காட்டிப் பூர்வஞானிகள்அரங்கங்களிலே நாட்டிவிட்டதோர்பொருளாகிய மாயை மாயையே என்றும் கடவுள் உலகங்களைப் படைத்துச் சலப்பிரளயம் முதலியவற்றல் ஒடுக்கி ஒடுக்கி வைத்தபொருள்கொண்டு மறுபடி தோற்றுவித்து இவ்வண்ணமாய் நெடுங் காலம் பயின்று வருகிருரென்னும் ஓர் கருத்தைப் பற்றிப் பிரவாகநித்தியமென்று மயங்கினர்களேன்றெடுக்கின், அவர்கள் சொல்லிய மாயை ஓர் சாயையே என்றும் முடித்துச் சிந்தித்திடுக.

தோற்றமுங்லைவுமீறும்மாயையின்றேழிலதென்ன
சாற்றிடுமுலகம்வித்துச்சாகாதிஅணுக்களாக
ஏற்றதேல்ஈண்டிநிற்கும்இல்லதேல்இல்லையாகும்
மாற்றம்நீமறந்தாய்இத்தால்மாயையைமதித்திடாயே.

வட்டுநகர் } இங்ஙனம்,
சாஸ்திரசாலை, } கு. க.

---

[On what ground will you reject the Bible?]

## சிவபூசைவேளையிலே கரடியைவிட்டீரா?

அப்பப்பா; கேட்டீராற்
கேட்டநாற்றுக்களை நட்டீரா?
உங்கள் வாயிலே மிருத்துவை இட்டீரா?

வண்ணார்பண்ணையிலே இருக்கும் மகத்துவமும் தயாளசீலமும் ஓங்க வளர்ந்த பிரபுக்காள், குபேரனைப்போலக் குன்ருத வாழ்க்கை வருவதாயின் அதனை உண்டு கழித்து மிருகங்களைப்போலக் காலம் விடலாமா? இல்லையே. நீங்கள் மக்கள் வகுப்புத்தான். இது எப்படித் தோற்றும்? நீவிர் நுமக்கும் பிறர்க்கும் நன்மைசெய்தற் பொருட்டுக் கழகமொன்று நாட்டினீர்களே. நாலுவித சாஸதிரங்களையும் கலைஞானங்களையும் பயிற்றி மனோதிமிரத்தை ஒறுத்தெறிவது மகா சந்தோஷமே. அழுகிற பிள்ளையின் வாயிலே சீனிபோட்டாற் போலாயிற்றே. எப்படி? எப்படியா? இவ்வூரவர்கள் கையிலே கைத்துண்டாங் காலத்து அதனை மமதை காரணமாய்த் தமக்குள்ளேயே வைத்துப் போத்திக்கொள்வதும் கைபறியவிடுங்காலத்துத் திருவிழா, நடனம், தாசிகள் சதுர்விளையாட்டு முதலிய அபிரயோசன அநாசாரங்களிலே லீலைபண்ணுவதுமேயன்றி நயன் நோக்கிய கிரியைகளைச் செய்வதில்லையேனப்பிறர் நம்மை இழித்துப் பேசும் இழிவுரைகள் யாவும் காது புளிக்கக் கேட்டுத் துக்கத்திற் குளித்துக் கண்கள் ததும்ப மயிர்குலைத்து நின்று ஆவென்று வாயெடுத்து அழுதோம். இப்பொழுதோ, நீவிர் செய்த தருமபரீட்சையால் வைகறைதோற்றுந் தாரகை நோக்கி, சூரியோதயோற் பாதமாமெனமகிழுந் தாமரைகளை ஒப்பேமானோம். ஆயினுஞ் சொல்வதொன்றுண்டு துர்ச்சகுனமோ? யார் அறிவர். கிறிஸ்தவர்களுடைய விவிலிய வேதாகமம் பயிற்றலாகாதென்று [illegible] ட்பாடுபற்றித்திரிவிராயின், இது நுமக்கு விவேகமானமன்று. எக்காரணம் நோக்கி அதனை [illegible] னக் களைவீர்? அதனிடத்தே துர்ப்போத [illegible] நுக்குமன்ரு? அஞ்ஞானந்தகாரத்தை [illegible] த்துமென்ரு? எதனை நோக்கி இவ்வாறு [illegible] பரதாரகமனம் முதலிய அவபத்தியான சரித [illegible] ள் கடவுளரைக் குறித்துப் பரிசுத்தமென்று [illegible] த்திற் சாதித்துப் போதித்திருக்கிறதென்று [illegible] ர்களா? இடைச்சிகள் ஸ்நான காலத்து அவர்களு [illegible] புனைந்த துகிற்களைக் களவாடி அப்பெண்களை [illegible] வாணிகளாய் லச்சையோடு வரச்செய்வதா [illegible] ர்த்த சமாசாரங்கள் இங்குண்டேன்ரு? [illegible] ப் பெண்களாயினும் அவர் கணவரை மால்கொண்டு பிரித்து மால்கொண்டு முயங்கிய சமாச்சாரங்களுண்டேன்ரு? பெண்டுகளோடு சூதாடித்தோற்று சாட்சிசொல்ல இருந்தவர்களைக் கொண்டு பொய் சொல்லுவிக்கும் தெய்வீகத்துவத்தை இது [illegible] றதென்ரு? கண்ணிருந்துங் காணீராயிற் காதிருந்துங்கேளீராயின்நும்மைச்சிரசேதம்பண்ணுவோமா [illegible] சன்மார்க்க நெறியைப்பற்றி உசித பெற்றி [illegible] ரைக்கப்பட்டதாகியஇந்நூலுக்குநிகரொன்றுண்டோ [illegible] சிருட்டிக்கிரமத்தைக் குறித்து இதுசொல்வதனைத்தள்ளுவீரா? உலகம் மாயோபாதானமாய்த் தோற்றிற்றெனச்சொல்லுமென்ரு அன்றேல், [illegible] ரமோபாதானமாமென்ரு?ஈசுரசத்திஅதிட்டிதமென்ப பாதானமாம்என்ரு? பிரமவிவர்த்தமாமென்ரு [illegible]

றேல் மூலப்பிரகிருதியின்நின்றுதோற்றுமென்ரு? எவ்வாறுசொல்லி வெல்வீர்! இவ்வாருய்க்குசமசக்குகள் பலதோகைப்படவிரிந்து கிடப்பன என்னுதிரேல் பின் யாது சொல்லி வெல்வீர்? காரியமிவ்வாறிருக்க நீங்கள் விவேகிகளாதற்குப் பின்னப்படுவீர்களா? ஒன்ருனதுஅருமை, சிறுமையை நீவிர்அறியாதிருக்கின் இது மகா குற்றமே. சிலர் இத்துணைத்தான விசேஷ விஷயத்தை நிந்திக்குங் காலத்தும் தள்ள முயலுங் காலத்தும் மவுனமாய் அதில் யாதொன்றும் பேசாதுஇருப்பதும் பெரிய குற்றமே. மேலும் தன்தலையிலும் பொறுக்கப் பெற்றிருக்கிற ஒருவன் மவுனமாயிருப்பானேல் அது மகா பெரிய குற்றமே. இதற்கு நியாயஞ் சொல்வது அவசியமன்று.

இவ்வாறு செய்பவன் யாவனாயினும் அவன் ஒளியைப் பகைத்து இருளோடுநட்பாடுகிறுன் எனக்கொள்ளவேண்டுமே. இன்னும் ஒருபாற்கொடிய மனத்தோராய்ச் சில சாஸ்திரங்களை வாசித்து சப்தமாத்திராமிர்தபானம்பண்ணிப்பொருள்கொண்டோமென்று விபரீதத்திற் பொங்கித் திரிகிறவர்களிதனை, அதாவது, வ்விலிய வேதத்தை ஆகாதெனத்தள்ளுவார்கள். இவர்கள் சொற்கேட்டீர்களா இவர்கள் செடிகளால் மூடப்பட்டு இருக்கும் மலைக்குகையின் பாதாலத்திலே இறங்கிச் சூரியனுடைய கதிர்ற் சிறுதுகளானது நுளைந்து வானங்களிலே வாசம்பண்ணினவர்களானபடியால் அதுவே பேரொளி சர்வஒளி வேறில்லையெனக் கொண்டாடுவாரைப் போலாய் முழைஞ்சு விக்கிரகவணக்கத்தாராயிருக்கிருர்கள். ஆகையால் நீவிர் யுத்திசாதனைசெய்து செய்யுங் காரியங்களை உபாயமாகச்செய்யுங்கள். உங்கள் பள்ளிக்கூடம் நடைபெறும்பொருட்டு பல உத்தியோகஸதர்களையும் நிறுத்தினீர்கள். இது நமக்கு மிக ஆனந்தமே, உபாத்தியாயர்களாகக் கனம்பொருந்திய McInstry அவர்களையும் தம்பு அவர்களையும் நிறுத்தினீர்கள். நல்ல சோடு. Committee என்று சொல்லும் நெறி நிறுத்தும் பிரபுக்களாக, ம.ள.ள. Brown, Martyn, Merwin, ஆறுமுகப்பிரசங்கியார், தம்பிப்பிள்ளை, சின்னக்குட்டி, வயித்திலிங்கம், பொன்னம்பலம் முதலாகிய இவர்களே. ம. ள. ள. இரகுநாதரவர்களும், பெரியப்புநாயக்கர் அவர்களும் Patrons என்று சொல்லும் ஆதாரத்தூண்களாயிருக்கிருர்களென்றும், இரகுநாதரவர்களே தலைவராக இருக்கிருரென்றும் அறிகிறேம். இவ்வகையான நெறி அமைப்புகள் நமது வாசஸதலமாகிய இந்நகரிலே உசிதமாய் நாடோறும் மாதங்கடோறும் நிகழக்கண்ணுரக்கண்ட நாம் இவற்றைக் குறித்தும் சில குறிப்புக்களைக் கூருது விடுவோமா?

இன்னும் வரும்.

---

உதயதாரகையினேர் கோணத்தில்.

வாதி திரிகோணமலையில் ஆலின் கீழ் வீற்றிருக்கும் சிவன் குமாரன் அபிட்டிங்குப் பிள்ளையார் பிரதிவாதி. (இராக்கினியின் றிங்குடோவ்) என்னும் சண்டைக் கப்பலில் செயிலர்களில் இந்த மீ௳ உ௫. தேதி கரைக்கிறக்கிவிடப்பட்டவர்கள்—வாதியின்பிராது.

வாதி திரிகோணமலையில் கோட்டைக்கருகானமுற்றவெளியிலிருக்கும் ஆலமரத்தின் கீழாய்க் குழக்கோட்டு மகராசா காலங் துவங்கி இந் நாள் மட்டும் இருந்து தன்னை வணங்குபவர்களுக்குக்கிருபை செய்து அவர்களைப் பாதுகாவற்பண்ணிவருகிறது. பிறகிட்ட இருபத்தைந்தாந்தேதியிலன்று வாதியின் சன்னதியில் அநேகர் வந்து பொங்கல் செய்து பழம், புக்கை, பண்ணிகாரம் முதலியவற்றை வைத்து வழிபடுகிற போது குறித்த பிரதிவாதிகள் வந்து வேணுமென்றும் வலோர்க்காரமாயும் அரசாட்சியின் நியாயப் பிரமாணத்துக்கு விரோதியாயும் வாதியின் சனங்களை அடித்துத் துரத்தி வாதிக்கு முன் வைக்கப்பட்டவைகளை புசித்ததுமன்றி வாதியின் பரிசுத்த மேனியில் சலபாதைக்குமிருந்து வாதிக்குச் சாராயத்தைப் பருக்கி இப்படியான வேத மோசங்களைச் செய்தும் வாதி வார்ப்பான கல்லாயிருந்ததினுற் சீவனுக்கு மோசமின்றித் தப்பிவிட்டது. ஆகையால்பிரதிவாதிகளை அழைத்து விளங்கி அவர்களுக்குத் தகுந்த கண்டிப்புச் செய்ய அரசாட்சிக்கேவுதல் செய்ய வாதி மன்ருட்டமாய்க்கேட்டுநிற்கிறது இப்படிக்கு,

| | |
|---|---|
| திரிகோணமலை | வாதியின் சன்னதகாரன் |
| ௲௮௱௪௮ம் ௵ | பூசாரியுமாகிய |
| ஆடி மா. உ௬ந் தே. | ஆள்வார் மணியர். |

---

# உ த ய தா ர கை.

௲௮௱௪௮௵ புரட். மாதம். உ௮, தேதி.

---

இந்துமதக் கொடுமை.

சென்னபட்டினத்திற் பிரசுரஞ் செய்யப்பட்ட (Instructor) என்னுஞ் சமாசாரப்பத்திரிகையிலே சென்றுபோன மாதத்திஞேர் ஞாயிற்றுக்கிழமை அவ்விடத்தில் நடந்த செடிலாடலைப் பற்றிச் சொல்லப்படுவதென்னவெனில், இற்றைக்கு இரண்டு வருடத்திற்குமுன் போலிஸ்த் துரையவர்கள் இச்செடிலாடல் வழக்கமாக இராயபுரத்தில் நடக்கும்படிக்கு மரம் நாட்டியிருக்கிறயிடத்துக்குச் சற்றே தூரமாக நடக்க வேண்டுமென்றும் அவ்விடத்திற் தோந்தரவு குறைவாயிருக்குமென்றுஞ் சொன்னுர். ஆனுற் சனங்கள் தங்களுக்கு முந்தின வழமைபோல நடக்கவேண்டுமென்றுசோவரணமேந்தாரிடத்தில்விண்ணப்பபத்திரமெழுதிக்கேட்டு முன்போலவே உத்தரவுபெற்றுக் கொண்டார்களென்று தெரியவந்தது. இத்தை வாசிப்பவர்களே, இந்துக்கள் இப்படியான வெறுக்கப்படத்தக்கதும் மிருகத்தனமானதுமான சடங்குகளை விடாமற்பிடிக்கும்படி செலுத்தின வைராக்கியத்தைப்பாருங்கள். இந்துமதத்தின் கீழ்மையான ஒழுக்கத்தைக் காண்பிக்க இதைவிட வேறென்ன அத்தாட்சி! இச் செடிலாடற் சடங்கு நடக்குமிடத்திற்கு உடுப்பில்லாமல் அரைவெறியுடனேபோவதையும்ஒரு குரு அல்லது ஒரு சண்டாளன் இரண்டு இருப்புக்கொளுக்கிகளை முதுகிற் சதைநரம்புகளின் கீழ் மாட்டுவதையும், அறுபதடி உயரத்துக்குமேல் அந்தரத்திலே ஒரு துலாவிலேதூக்கப்படடுப்பார்த்துக்கொண்டு நிற்குஞ் சனங்களுடைய சிரசுகளுக்குமேலே அரைமணித்தியாலமளவுக்கு ஊஞ்சலாடிக்கொண்டு கிடப்பதையும் நினைத்துப் பாருங்கள். இப்படிச் செய்வதெல்லாங் கடவுளுடைய கிருபையைப்பெற்றுப் பாவப் பொறுத்தலடையவென்றெண்ணுகிறீர்கள். இதுவே பராபரனுக்கு விரோதமான பெரிய பாவமாயிருக்குதே. ஒருபாவம் மற்றொரு பாவத்தைப் போக்குமா? ஒருவன் தன்னுடம்பைச் சுத்திசெய்யக் கிசிலினுற் குளிப்பானு? பராபரன் விலக்கினவைகளைச் செய்வதினுல் அவருடைய தயவைப்பெற்றுக் கொள்வீர்களா?

நியாயமும் மனச்சாட்சியுமில்லையென்குது. இந்து மதந் தன் சடங்குகளினுல் ஆமென்குது.

---

நியாயாலோசனைச் சங்கம்.—நியாயாலோசனைச் சங்கம் ஐப்பசி மாசம், உ௭ந் தேதி திங்கட்கிழமை கூடப்படுமென்றறிவிக்கப்பட்டது.

ஆர்ச்சுடீக்கனுயிருக்கும் வேலி (Bailey) என்பவர் இரண்டு வருடத்திற்கு உத்தரவு பெற்றுக் கொண்டு சீக்கிரம் தமது சுயதேசத்துக்குப் போகவிருக்கிருரென்றும், அவர் திரும்பி வருமளவுங் கனம்பொருந்திய (S. Glenie) ஸ். கிளினி என்பவர் அவருடைய இடம்பராமரிப்பார்என்றும் கிளினியென்பவருடைய இடம் பராமரிக்கும்படிக்கு இப்பொழுது காலியிலிருக்கும் (Dr. Garstin) கார்ஸ்றின் என்பவர் கண்டிக்குப் போகக்கூடுமென்றும் நடபடிக் கதையாயிருக்குதென்றும் (Examiner, என்னும் புதினப்பத்திரிகையாலறியவந்தது.

கனம்பொருந்திய (Von Dadelzen) வொன்டேடெல்சென் என்பவர் இங்கிலாந்துதேயம் தனது தேகத்துக்குச் சவுக்கியமில்லாமையாற் சீச்சிரம் அவ்விடம்விட்டுத் திரும்புவாரென்றுதெரியவந்தது.

---

மாரிசராசன்.—கண்டியரசனெனமுடிதரித்ததாவீது அப்புஎன்பவன் போனகிழமை ஓரிரவில் அகப்பட்டு விடக்கூடியதாய்க்கிட்டியும் தப்பிவிட்டான். அவனும் அவனேடே கூடிய வேறு பேருமிருக்கிறயிடத்துக்கு உடுப்பில்லாதபடி ஒரு சுவேதாருஞ் சில மலாயச் சிப்பாசிகளுஞ் சுவடுபிடித்து ஒரு சிறு வீட்டண்டை போனுர்கள். அந்நேரம் இருட்டாயிருந்தது. இவர்கள் அந்த வீட்டைவளைந்துகொண்டு நின்ற வேளையில், ஒருவன்மேல் மாடத்துசாளரவழியாகக் குதித்துக்காட்டுக்குள்ளேஓடிவிட்டான். அவன்தான்அந்தக்கலக அரசனென்பதாய்ப் பிறகு தெரியவந்தது. இருட்டாயிருந்ததினுலும் அந்தப் பக்கமறியாத தீக்காயிருந்ததினுலும் அவனைத் தொடர்ந்து பிடிக்கக் காட்டுக்குட்போகக் கூடாமற்போயிற்று. அந்த வீட்டுக்குட்புகுந்தபொழுது அவனுடனேகூடிய ஆறுபேர் ஆயுதங்களுடனேபிடிக்கப்பட்டார்கள். அவ்வரசனுடையமலாம்பதிந்த வாட்பூட்டுமிடைக்கட்டும் நல்ல சித்திரமானவாளும், ஒருகைத்துப்பாக்கியும், வில்லூர்திப்பட்டினுற் செய்யப்பட்டயுறையுடனேகிரீசுகளும்எடுபட்டன. இதுவரையில்அந்தநழுவி அகப்பட்டுவிடுவானென்பதுநம்பிக்கை,—அவனுடைய சகோதரன் (Upper Doombra) என்னும்பகுதியிலொழித்திருக்கிருனென்று பேச்சாயிருக்குது.

குருஒழுங்கு.

இந்தச் சகோதரர் ஒருவரையொருவர் எப்படிச் சிநேகிக்கிருர்களென்பதைப் பாருங்கள். ஐரீஸ்தேசத்து ரோமான் குருமாருங் கோவையிற் குருமாரும் சிக்கந்தரபாத்திலே போர்ச்சேவுகரையுங் குழப்பத்தக்கதாகச் சண்டைபிடித்தார்கள். அப்போ ஐரீஸ் குருமாருடைய மூட்டுதலினுற் போர்ச்சேவுகரிற் சிலர் ஒரு கோவிலைப் பிடுங்கினுர்கள். அந்த வெட்கப்படத்தக்க செய்கையின் நிமித்தம் மேபிஎன்னும் வைத்தியனையும், ரோமான் கத்தோலிக்க மேத்திராணியாகிய கனம்பொருந்திய மேக்சுவீன் என்பவரையும் அவருடைய சகோதரனையும் கனம்பொருந்திய டோயில் என்பவரையும் தள்ளிப்போடும்படி கட்டளையிடப்பட்டது.

---

கொழும்பு.

தோட்டவருமானமில்லாமையால் அப்பராபரிப்பிலிருந்திச்செலவுதள்ளுப்பட்டசிலதுரைமார் தோறிங்றன்என்னுங்கப்பலிலேறி ஒஸ்திறியாவுக்குப்போகும்படிபண்ணப் பணஞ்சேர்க்கிறதற்கு நல்லஉபாயமென்னவென்ருலோசிக்கும்படிக்குக் கொழும்பில் United Service Library) என்னும் வீட்டில் ஒரு பிறசித்தமான கூட்டங் கூடப்படுமென்றறிவிக்கப்பட்டிருக்குது. கனம்பொருந்திய கோவரணதோர் தேசாதிபதியவர்கள் இதுகாரியத்துக்குதவியாகத் தன்பணமாக ஐம்பது பவுண்கொடுத்தார்.

கண்டி.

சுப்றீங்கோடு.—நாலு புத்தகுருமார் இராசகலகத்தினிமித்தம் விளங்கித் திங்கட்கிழமையிலன்று விடுதலையாக்கப்பட்டார்கள். இந்தமாதம் ௰௮. தேதி கோடு முடிந்தது. பதினேழு மறியற்காரரைத் தூக்கத் தீர்வைபண்ணியும் அவர்களுக்கிரக்கங் கிடைத்தது. ஒருவேளை பிரதேசத்துக்கேற்றத் தீர்க்கப்படுவார்களாக்கும்.

இச்செலவு கொழும்பிலே கூடின சுப்பிறீங்கோட்டில், ஒரு சிங்களவன் கொலைகாரியத்துக்காகக் குற்றவாளியாகத் தீர்ந்து இந்த மாதம் ௪. தேதி கண்டியிலே தூக்கப்பட்டான். இரண்டுகுற்றவாளிகள், ௰௩. தேதி திங்கட்கிழமை அவ்விடத்திற்ருனேதூக்கப்பட்டார்கள். வேறிரண்டுபேர்கொலைக்கேதுவாகத்தீர்க்கப்பட்டும் மறுபடி, கொல்லாமல்அவர்களைப்பதினுலு வருடத்துக்குப் பிரதேசத்துக்கேற்றவும், கலகக்காரரில், மாத்தளையென்னும் ஊரில் றட்டமகத்துமை என்பவனுடனே கூட இருபத்துமூன்றுபேர் பிறவூருக்கேற்றப்படவுந் தீர்க்கப்பட்டுக் கொழும்பில் வந்து சேர்ந்திருக்கிருர்கள்.

---

பிரதேசசமாசாரங்கள்

ஐறிஸ் தேசத்தில் ஸமித் ஒபிறயன் என்பவனுடன் கூடிய கலகக்காரர் சில நகரிகாப்பவர்களால் முறியடிக்கப்பட்டார்கள். சிமித் ஒபிறயனும் சிறைபிடிக்கப்பட்டான். இங்கிலாந்தில் யாதொரு குழப்படியுமில்லை. எங்கும் சமாதானமாய் இருக்குது, மாரி வேகுத்ததால் வேளாண்மை குறைவுபடுமென்று எண்ணவேண்டியதாய் இருக்குது.

பிருஞ்சுதேசம். பிருஞ்சுதேசம் ஒருபடி அமைதியாய் இருக்குது.

ரோமை.--ஒஸதிரியாவுக்கு விரோதமாகச் சண்டைசெய்ய பாப்புவானவர் சம்மதிகொடாதபடியால் இப்பொழுத ரோமை நாட்டுக்குக் கடுமைவந்திருக்குது. இத்தாலியா நாட்டிலே ஒஸதிரியச்சேனைக்கும் சால்சு அல்பேடுத்து என்பவனுடைய சேனைக்கும் கடும்போர்நடந்து சால்சு அல்பேடுத்தின் சேனை புறங்காட்டினதினுல் அவன் தனக்கு உதவிசெய்யவேண்டுமென்று பிருஞ்சிக்காரரை வருடிக்கேட்டுக்கொண்டான். ஆனுற் பிருஞ்சுக்காரரும் இங்கிலாந்தாரும் அவ்விரு திறத்தாரையும் சமாதானப்படுத்திவிடும் எண்ணத்துடன் இருக்கிருர்கள் என்றுகதையாய் இருக்குது.

சருமானிய தேசத்தவர்களுக்கும் தென்மார்க்கு தேசத்தவர்களுக்குஞ்சமாதானஉடன்படிக்கைசெய்துகொளக் கூடாதேபோயிற்று.

வையென்னு.—வையென்னுவிலும்புதிதாய்ஊர்க்கலம்பகம் நடக்கத்தக்க மொறமொறுப்பு உண்டுபட்டிருக்கின்றது.

ஐக்கதேசம்.-ஐக்கதேசத்தவர்களுக்கும் மெக்கிசிக்கோநாட்டாருக்கும் சமாதானம் அதிகாரத்துடன் கூறப்பட்டது

ஐக்கதேசத்துக்கு இருக்குங் கடன் அறுபத்தைந்து இலட்சம் இஸ்பானிஸ் டொலர்.

மெக்சிக்கோநாட்டிலும் ஊர்க்குழப்பம்நடக்கிறதாயிருக்குது. இராச்சியத்தைநிலைநிறுத்தத்தக்க சங்கப்பேலப்புஅவர்களுக்கு இல்லையென்று காண்குது.

ஸ்பானியாதேசத்திலே கலக்கத்துக்குப்பின் கலகமெழும்பி இடைவிடாமற் பேதமான வேடிக்கைகள் நடக்குது. இவ்விரண்டு நாட்டிலும் ரோமான் மதங் கொடுக்குங் கனி இதுதான்.

# MORNING STAR.

## Jaffna, September 28th, 1848.

### SKETCHES OF THE JESUITS.

*I.—Their origin and history.*

The Jesuits are a religious order or sect, connected with the Roman church. The order was founded in the year 1540, by Ignatius Loyola. Its first object was to check and oppose the progress the Reformation begun by Luther —Paul III. was then Pope. Loyola applied for his sanction of the sect, but was at first refused.—Beside the ordinary vows of *poverty*, *chastity* and *monastic obedience*, he pledged his followers to take the vow of *unconditional obedience to the Pope*;—to go any where, at any time, on any errand, at the Pope's command, and never to ask him for a dollar for their support.—The Pope's affairs being then rather desperate, he saw the advantage that would accrue to the Papal power by the accession of such a body of sworn followers. He confirmed the sect by a Bull, with certain restrictions in 1540; and, in 1543, to shew his satisfaction with their zeal and fidelity, he renewed the Bull of confirmation without any restrictions whatever. And, to render the act more memorable, he had two medals struck on the occasion. On one of them was the impious inscription: "The gates of heaven opened;" and on the other, the flattering but deceptive one: "The security of the Roman people."—For a time, the members of the sect were few, but soon large numbers were captivated by its lofty pretensions and its assurances of heavenly bliss.

The Jesuits claimed to have received revelations from the deity; they positively declared that "God had granted to every member of the Society, who might join it in the three first centuries, *the privilege of escaping damnation*, and that whoever should die in communion with the Society, should obtain everlasting felicity." In little more than half a century after its commencement, its members exceeded *ten thousand*,—a century later it numbered *twenty-thousand members* and upwards of *six hundred Colleges*. The Jesuits applied themselves to every useful function and curious art; and neither neglected nor despised any mode, however humble, of gaining employment or reputation. They labored especially to obtain for themselves the office of instructers of youth, and, so far succeeded in ingratiating themselves with persons in power that, before the end of the sixteenth century, they had become confessors and spiritual directors of the principal monarchs of Europe, and had obtained the chief direction of education in almost every Catholic country. Their influence was also controlling in most departments of Government. In spite of their vow of poverty, their wealth increased with their power, and they gradually obtained extensive and valuable possessions.

The Jesuits at an early period engaged in propagating the Roman faith in Foreign countries. Missionaries were sent to India soon after the formation of the Order, and in Goa, Travancore, Cochin, Malacca and Ceylon, many thousand natives were converted to the Roman faith, and colleges for education were established in several places. Japan and China were also visited by them where many converts were made. From India the Jesuits went into Abysinnia—where they were at first tolerated, but the Emperor finding them intriguing against himself, and using fire and sword to make proselytes to the Roman faith, he expelled them from the kingdom and prohibited them on pain of death from ever entering it again. A large company of Jesuits were sent to South America about the beginning of the seventeenth century, where they labored successfully for the civilization of the natives of Brazil and Paraguay.—Having acquired such extensive power and influence, their movements were jealously watched; while their passion for intrigue, together with the publication of their principles, which had been long carefully kept secret, exposed them to severe public reprobation. Their influence was ere long considered dangerous to public morals and to the peace and welfare both of church and state. The Jesuits were expelled from England in 1604; from Venice in 1606, and from Portugal in 1759. In 1762, the institution was condemned by the Parliament of France, as "contrary to the laws of the state, to the obedience due to the sovereign and to the welfare of the kingdom." The order was dissolved and their effects alienated.—In 1767, the Jesuits in Spain were shipped out of the kingdom by order of the king, and all their property was confiscated. The next year the king of Naples and the Prince of Parma banished them from their dominions, as an order dangerous to their Governments. In 1773 Pope Clement XIV. entirely suppressed the order. On signing the Bull for the suppression he is said to have remarked: "The suppression is accomplished. I do not repent of it, having only resolved on it after examining and weighing every thing, and because I thought it necessary for the church: and if it were not done I would do it now; but this suppression will be my death."—In June the following year he was suddenly cut off. On his death-bed he exclaimed:—"I am going to eternity and I know for what." His body after death presented the appearance of having suffered from violent poison. It is supposed he was a victim to the revenge of the Jesuits.

After the Society had been suppressed about 30 years, attempts were made to re-establish it. In 1801, Pius VII issued a Brief allowing the Jesuits of Russia to live as a Society and to have Colleges and Schools. By another Brief dated July 30, 1804, they were allowed to open Schools and Colleges in the kingdom of the two Sicilies. In August 1814, the Order was solemnly restored by a Bull of Pius VII. in which, with singular incongruity, it is affirmed to be above the recall or revision of any future judge.—But they have however a second time been suppressed, in Spain, France, and Austria, and in most, if not all of the Italian States. It is admitted on all hands that the Jesuits, during the first two centuries of their existence, rendered important services to education, literature and the sciences —but their character as a whole, derived from their history, is well indicated in the significant terms which common usage has established as the definition of *Jesuitism, viz.*—"*Cunning; deceit; hypocrisy; prevarication; deceptive practices to effect a purpose.*"

### PENANCE NOT REPENTANCE.

Repentance is not a suffering of the body,—a torture, self-inflicted or imposed by another; but it is an act of the mind, a spiritual exercise, a conversion of the soul to God. One may repent when standing, sitting, or prostrate,—while the body is in health and in the enjoyment of food, not emaciated or lacerated, not neglected, bleeding, or crushed. Repentance is a renunciation of sin, with self-abasement and self-condemnation. It may be attended with flowing tears, with joyful praises, or with profound silence, and keen remorse. It is certainly followed by sincere love to God, and active obedience to his will.

